HMOP.174/2024 நாள் : 28.07.2026

PW1 – வேலு

குறுக்கு விசாரணை

சீர்வரிசை வாங்காமல்தான் எங்கள் திருமணம் நடந்தது என்று நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் பலவருடங்கள் சிறையில் இருந்துள்ளேன் என்றால் சரிதான். நான் என்ன வழக்கில் சிறையில் இருந்தேன் என்ற விவரத்தை நான் மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். நான் போதைப்பொருள் கடத்தல் வழக்கில் சிறையில் இருந்தேன். நான் சிறையில் இருந்தபோது எதிர்மனுதாரருக்கு பணம் அனுப்பியதற்கான ரசீதுகள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை, மணியார்டர் மூலம் அனுப்பியுள்ளேன். அதற்கான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரருக்கு பணம் எதுவும் சிறையில் இருக்கும்போது அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஒரு மகள் உள்ளார். அவர் தற்போது எதிர்மனுதாரருடன்தான் வசித்து வருகிறார். எனது மகளுக்கு என்று நான் எதுவும் இதுவரை செய்யவில்லை. எனது மனைவிக்கும் நான் சிறையில் இருந்து வந்தபிறகு எதுவும் செய்யவில்லை. எதிர்மனுதாரர் கூலி வேலை செய்து அவரையும், மகளையும் பார்த்து வந்தார் என்றால் சரிதான். நான் வெளியே வந்த பிறகு நான்தான் அவர்களை பார்த்து வந்தேன். நான் அவர்களுடன் சேர்ந்து வசிக்கவில்லை என்றால் சரிதான். நான் சிறையில் இருந்து வெளியே வந்த பிறகு எதிர்மனுதாரரையும், மகளையும் பார்த்து வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்தான் என்னிடம் சண்டை போட்டு வன்கொடுமை செய்தார் என்று மனுவில் கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. கோவில் இடம் ஒன்று உள்ளது. அதை எதிர்மனுதாரர்தான் ஆண்டனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

எனது மனுவில் 5வது பாராவில் எனது பெண் குழந்தைக்கு சடங்கு சம்பிரதாயங்கள் செய்ததாக கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. நான் நீண்ட நாள் சிறையில் இருந்து திரும்ப வந்ததால் திருந்தி வந்திருப்பேன் என்ற நம்பிக்கையில் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழலாம் என்று நினைத்தார் என்றும், ஆனால் நான் மீண்டும் மீண்டும் குடித்து விட்டு வந்து எதிர்மனுதாரருடன் சண்டையிட்டு வந்ததால் எதிர்மனுதாரருக்கு என்னுடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரரான எனது மனைவிக்கும், குழந்தைக்கும் நான்தான் கார்டியன் என்ற முறையில் அவர்களுக்கு எந்த ஒரு உதவியும் செய்யாததால் அவர்கள் என்மீது ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்ய தயராக உள்ளார்கள் என்றால் என்னிடம் எந்த சொத்தும் இல்லை, கோவில் இடத்தையும் எதிர்மனுதாரரிடம் ஒப்படைத்து விட்டேன். மேலும் எனது செலவிற்காக மட்டுமே நான் டிரைவர் வேலை பார்த்து சம்பாதிக்கிறேன். நான் இனி குழந்தை வேணிஸ்ரீக்கு எந்த தொந்தரவும் கொடுக்க மாட்டேன் என்று உறுதியாக கூறுகிறேன். எதிர்மனுதாரரையும் அவர் வேலைக்கு செல்லும் இடங்களிலும், அவரது அம்மா வீட்டிற்கு சென்று எந்த தொந்தரவும் கொடுக்க மாட்டேன் என்று உறுதி கூறுகிறேன். நான் இனி திருந்தி வாழ வாய்ப்பில்லை என்பதால் எதிர்மனுதாரருக்கு மனுப்படி தீர்ப்பாக ஆட்சேபணையில்லை என்றால் எனக்கு தெரியாது.